IN THE COURT OF JUDICIAL MAGISTRATE ARAKKONAM, RANIPET DISTRICT

PAGE NO.29/2021

DEPOSITION OF WITNESS

(Chapter XXIIII of Criminal Procedure

| | | |
|---|---|---|
| Calender | : | CC.136/2018 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution : PW-1 |

| | | |
|---|---|---|
| Neme | : | மங்கையர்கரசி |
| Husband Name | : | முனுசாமி |
| Village | : | சாலை |
| Taluk | : | அரக்கோணம் |
| Caste | : | - |
| Calling | : | விவசாயம் |
| Religion | : | Hindu |
| Age | : | 55 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 18.02.2021.

மு.வி.சத்தியப்பிரமாணம் தாக்கல் செய்யப்பட்டது.

***18.08.2018 அன்று மாலை 3 மணிக்கு நானும் எனது கணவர் முனுசாமியும் இருசக்கர வாகனமான ஸ்குட்டி வண்டியில் அரக்கோணத்தில் இருந்து சாலை என்ற ஊரை நோக்கி செல்லும்போது வேடலுக்கும் காந்திநகருக்கும் நடுவில் அருள் என்பவர் வீட்டு அருகில் எனத கணவர் வண்டியை சாலையின் ஓரத்தில் இருக்கும் வெள்ளை கோட்டிற்கு அந்தப்பக்கம் நிறுத்தினார். நான் வண்டியில் இருந்து இறங்கி சாலையை***

கடந்து வேர்க்கடலை வாங்க சென்றேன். டைல்ஸ் ஏற்றி வந்த டாட்டா ஏசி வண்டி அரக்கோணத்திலிருந்து சோளிங்கர் நோக்கி வேகமாக வந்து பின்பக்கமாக இடித்து தள்ளிவிட்டது. இடித்த வேகத்தில் எனது கணவர் பக்கத்தில் இருந்த புல் மீது விழுந்து விட்டார். பின் தலையில் உள்காயம் ஏற்பட்டு காதில் இரத்தம் வந்து சம்பவ இடத்தில் இறந்த விட்டார். அந்த வண்டியின் என் ஞாபகம் இல்லை. நீதிமன்றத்தில் உள்ள நபர் தான் அந்த வாகனத்தை ஓட்டினாரா என்றும் அவர் தான் விபத்தை ஏற்படுத்தினாரா என்றும் சரியாக நினைவில்லை. பின்னர் எனது கணவரை அரக்கோணம் அரசு மருத்துவமணைக்கு கொண்டு சென்று அங்கு எனது கணவருக்கு பிரேத பரிசோதனை செய்து என்னிடம் ஒப்படைத்தனர். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் <u>அ.த.சா.ஆ.1</u> ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

கு.வி.

என்னிடம் காட்டிய என் கையெழுத்துள்ள பேப்பரில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது கணவருக்கு வண்டி ஓட்டுவதற்கு லைசன்ஸ் உள்ளதா என்றால் உள்ளது. போலிசாரிடம் அந்த லைசன்சை கொடுத்தோமா என்றால் நினைவு இல்லை. அந்த விபத்தை நான் நேரடியாக பார்த்தேனா என்றால் பார்த்தேன். இந்த விபத்து எனது கணவர் போன் பேசிக்கொண்டு அஜாக்கரதையாக திரும்பியதால் தான் இடித்தது என்றால் சரியல்ல. எந்த வண்டி இடித்தது என்றால் டாட்டா ஏசி வண்டி எண் எனக்கு தெரியாது. விபத்துக்களானவர் எனது கணவர் என்பதால் அவருக்கு பவ்வியப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.